● இந்தியப் பிரதமர் எச்சரிக்கை

# தமிழக அரசிற்கு வழங்கும் தகவல்கள் தமிழ்ப் போராளிகளுக்கும் கிடைக்கிறது



மத்திய அரசுடன் மோதுவதை தமிழக அரசு தவிர்த்துக் கொள்ளவேண்டும் என இந்தியப்பிரதமர் சந்திரசேகர் முதலமைச்சர் கருணாநிதியை நேற்று எச்சரித்துள்ளார். ஈழத் தமிழ்ப்போராளிகள் நடமாட்டத்தை வைத்து தமிழக அரசை கலைக்கும் நோக்கமில்லை. ஆனால் தமிழகம் மத்திய அரசுடன் மோதுவதை தவிர்க்கவேண்டும் எனப் பிரதமர் குறிப்பிட்டார். நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் ஈழப்போராளிகள் குறித்து முன்னறிவிப்பு அற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் சந்திரசேகர், "இன்று தமிழ்நாட்டில் ஏ. கே. துப்பாக்கிக்கலாசாரம் தோன்றிவிட்டது. போராளிகளை கைது செய்தல், நடமாட்டத்தை கட்டுப்படுத்தல் போன்ற ரகசிய தகவல்களை தமிழக அரசிற்கு வழங்கினால் அத்தகவல்கள் போராளிகளுக்கு கிடைத்து விடுகிறது. இதனால் தமிழக அரசிற்கு தகவல்கள் கொடுக்க தயக்கமாக இருக்கிறது. மத்திய அரசு முன்னரைப்போல் சென்னையில் இருந்து இயக்கப்படவில்லை அது நாடாளுமன்றத் திலேயே இயங்குகிறது. முன்னர் தமிழ்ப்போராளிகள் குறித்து வி. பீ. சிங் அரசின் கவனத்திற்த கொண்டுவந்தபோது அது அசட்டையாக தூக்கி வீசப்பட்டது. இப்போது தமிழக நிலை மிகமோசம். இது இந்தியாவின் ஒற்றுமைக்கு பங்கமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் கருணாநிதி மத்திய அரசிற்கு எதிராக விடும் அறிக்கைகளை கைவிடவேண்டும் போராளிகளை கைது செய்வது தொடர்பாக கருணாநிதியை சந்தித்தபோது நானே அதைச்செய்து முடிக்கிறேன் என உறுதி வழங்கினார். பின்னர் மத்திய அரசின்வற்புறுத்தலினாலேயே போராளிகளை கைது செய்யவேண்டிய நிலை தோன்றாது என்று கூறுகிறார் — 4ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா. 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 45 பிரமோதூத மார்கழி 27 (11-01-1991) வெள்ளி

விடுதலைப் புலிகளால் காவலில் வைக்கப்பட்டிருக்கும்

# 43 சிங்களப் பொலிஸாரை செஞ்சிலுவை பார்வையிட்டது

## யோகியும் உடன் சென்றிருந்தார்

விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நாற்பத்து மூன்று சிங்களப்பொலிஸ்காரரை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் நேற்றுக்காலை 9 மணியளவில் நேரில் சென்றுபார்வையிட்டனர்.

இவர்களுடன் விடுதலைப் புலிகள மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகியும் சென்றிருந்தார்

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பொலிஸார் ஒவ்வொருவரையும் தனித்தனி சந்தித்து உரையாடினர் தாம் புலிகளால் நன்கு கவனிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜூனில் யுத்தம் தொடங்கிய போது வடக்கு கிழக்கு பொலிஸ் நிலையங் — 4 ஆம் பக்கம் பார்க்க

## இரு மாதக் கட்டு நிதி வரவில்லை

## அக்டோபர், நவம்புர், டிசம்பர் பென்சன் வவுச்சர்கள் வந்துள்ளன

ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ளன. இவை தபாலில் அனுப்பப்படவுள்ளன.

அக்டோபர் மாதம் தவிர நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய கட்டு நிதி இன்னும் கிடைக்கவில்லையென ஒய்வூதியப்பிரிவு தெரிவித்துளளது, (66)

## அரசின் யுத்த நிறுத்தம் ஒரு வாரம் நீடிப்பு!

ஸ்ரீலங்கா அரசினால் நேற்று நள்ளிரவு முதல் மேலும் ஒருவார காலத்திற்கு யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட்டதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான உத்தியோக பூர்வமான அறிவிப்பு ஜனாதிபதி செயலகத்தினால் இன்று காலை அறிவிக்கப்படும்.

நேற்று மாலை ஜனாதிபதிக்கும் 14 எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட பெரும்பாலான கட்சிகள் யுத்தநிறுத்தத்தை நீடிக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொண்டன.

## பிரதேச சுயாட்சி வழங்குக! சர்வதேச விழிப்புக்குழு வலியுறுத்து

ஐ நா., செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் கூட்டு அமைப்பின் சேவைகளை போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கும் மனிதாபிமான பணிகளை உறுதி செய்வதற்கும் பயன்படுத்துமாறும் சர்வதேச விழிபபுக்குழு இலங்கை அரசைக் கேட்டுள்ளது

விழிப்புக்குழு இது தொடர்பாக வடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் — 4 ஆம் பக்கம் பார்க்க

எதிர்க்கட்சிகள்

## வடக்கே செல்ல கோரிக்கை அமைச்சர் ரஞ்சன் நிராகரிப்பு

யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதால் வடக்கிற்கு செல்ல அனுமதிக்குமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்துளளது.

பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தலைமையில் நடந்த அரசியற்கட்சிகளின் இணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட லிபரல் கட்சி பிரமுகர் சுசித பெரேரா இக்கோரிக்கையை விடுத்தார்.

வடபகுதியில் முழுமையான கட்டுப்பாடு இல்லை இதனால் அங்கு அரசியல் பிரமுகர் — 4 ஆம் பக்கம் பார்க்க

## முரணான செய்திகளை வெளியிடும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள்

கொழும்பிலுள்ள சிங்களப் பத்திரிகைகள விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தலைப்புச் செய்திகளிலும், ஆசிரியத் தலையங்கத்திலும் வெளியிட்டு வரு — 4 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல்வாதிகளின் பாதுகாப்பு அரைப்பங்காக குறைப்பு

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள சகல அரசியற்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் போன்ற அனைவரது பாதுகாப்புகளும் குறைக்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகளின் பாது — 4 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் ஷெல் தாக்குதல் வயலில் வேலை செய்தவர் மீது சூடு

காரைநகர் கடற்படையினர் ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் அடிக்கடி மேற்கொளகின்றனர்

நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் பலகாட்டுப் பகுதியில் உள்ள மூன்று விடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் வயலில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் மீதும் ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது. (ப 31)

## இரு முஸ்லிம் ஊர்காவற்படையினர் மன்னாரில் தப்பியோட முயற்சி!

மன்னாரில் உள்ள முஸ்லிம் ஊர்காவற்படையினரில் சிலர் அங்கிருந்து தப்பியோட முயன்றபோது இராணுவத்தால் பிடிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னாரைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு ஊர்காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

சில தினங்களுக்கு முன்னர் தப்பியோட முயன்ற இருமுஸ்லிம் இளைஞர்கள் படையினரால் பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. (16)

## அனைத்துப் பாடசாலைகளுக்கும்

தென் தமிழீழ மாணவர்களின் கல்வி, இதர நிலைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு அனைத்துப் பாட — 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாட்டில் இலங்கை இளைஞர்கள் தமிழ்க் குழுக்களால் துன்புறுத்தல்

இங்கிருந்து இந்தியாவுக்குச் செல்வோரைத் தற்போது அங்கு அடைக்கலம் புகுந்துள்ள தமிழ்க்குழுவொன்று பலவித இம்சைகளுக்கு உள்ளாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மண்டபம் அகதி முகாமிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படும் இலங்கை இளைஞர்கள் இவர்களால் கூட்டிச் செல்லப்பட்டு, விசாரிக்கப்பட்டு, கடுமையான சித்திரவதைக்கும், தாக்குதலுக்கும் உள்ளாக்கப்படுவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருந்தொகையான பணத்துடன் செல்பவர்கள் கடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-32)

## பரீட்சைக்கு ஏற்பாடு

யாழ் கல்விப் பணிப்பாளரினால் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் க. பொ. த. உட்பட பொதுப் பரீட்சைகள் நடாத்தக் கூடிய மண்டப வசதிகள் உள்ள பாடசாலைகள் பற்றிய விபரங்களை உடனடியாக அறிவிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (ப-17)


கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி

### பதவி வெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் ''தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் விலாசத்திற்கு தபாலின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 21 - 01 - 1991 அன்று நண்பகல் 12 00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் (101/6)

1. சம்பள அளவுத்திட்டம் மாதம்:-
   1305-60 × 4-75 × 11-2370-ம் அங்கீகரிக்கப்பட்ட படிகள் யாவும்.
2. கல்வித்தகைமைகள்:-
   அ. கூட்டுறவு ஊழியர் 7-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 8-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் ஆறுவருடத்துக்கு குறையாத அனுபவம்.

   ''அல்லது''

   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

   ''அல்லது''

   இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்பத் தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
3. வயது:- 25 தொடக்கம் 40 வரை

குறிப்பு:-

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களினதும், அனுபவச் சான்றிதழ்களினதும், கல்விச்சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
2. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையவர்கட்கு 25-01-1991 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சை எமது சங்கக் காரியாலயத்தில் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி) நடைபெறும்.

தலைவர்
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி. 07 - 01 - 91
01079


# காங். கரையோர மீனவர்களின் ஒருகோடி ரூபா உடைமைகள் சேதம்!

கடந்த யூன் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காங்கேன்துறை கடற்றொழிலாளர்களின் 88 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் காங்கேசன் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு கடற்றொழிலாளர்களிடம் பெற்றுக் கொண்ட சேத விபரங்களில் இருந்து இந்தக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

100 கடற்றொழிலாளர் குடும்பங்கள் இவ் அமைப்பில் அங்கத்துவம் வகித்தும் 68 குடும்பங்களிடமிருந்தே சேத விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என இதன் தலைவர் தெரிவித்தார்.

இவ் விபரங்கள் மக்கள் முன்னணியின் கடற்றொழில் நிர்வாகத்திடமும் யாழ் மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி அதிகாரியிடமும் கையளிக்கப்பட்டது. (ப. 10)

## அடையாள அட்டை

மன்னார் நகர்ப் பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராம சேவை அலுவலர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கியுள்ளார்கள். (17)


## சிறு விளம்பரம்

### விற்பனை

லைடன் ரெக்ஸிரைஸ் சென்ரர் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை தைப்பொங்கல்வரை நீடிக்கப்பட்டுள்ளது. 241, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (த பினான்ஸ் கம்பனி கட்டிடம்) 01048

### விற்பனைக்கு

1991-ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக 1990 டிசம்பரில் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி விற்பனையாகிறது தொகையாக வாங்குவோர்க்கு விலைக்கழிவு உண்டு. விபரங்கட்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இருபாலைச்சந்தி. 01071

### விற்பனைக்கு

மின் உபகரணங்கள் புதிய சைனீஸ் அலர்பான் பெட்டி No 1 அலர்பான் பெட்டி மோட்டர் $7\frac{1}{2}$ H P மோட்டர் 5 H P ஸ்ராட்டர் 2 மெயின் சுவிச் மற்றும் இவற்றக்குரிய வயர், பைப்புக்கள் விபரங்களுக்கு: சிவா ஸ்ரோர், உரும்பராய் சந்தி, உரும்பிராய். 01087

### தவறிவிட்டது

செ. கேசவமூர்த்தி இல. 512291090 V உள்ள அடையாள அட்டை சிறிதளவு பணம் உள்ளடக்கிய சிவப்பு நிற மணிபேர்சுடன் திருநெல்வேலிச் சந்தையில் 7.1 91-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 01086

### விற்பனைக்கு

நீம் சுகாதாரத் தூபம் பாவித்து நுளம்புத்தொல்லையிலிருந்து விடுதலை பெறுங்கள். ஒலிவ் ஸ்நானப்பவுடர் எண்ணெய்த் தோய்ச்சலுக்கு முந்தையோர் கண்ட முறையில் தயாரானது. பக்கெற் ஒன்று ரூ. 1. 25. 25 பக்கெற் கொண்ட காட் ரூ. 25. 00 மில்க்வைற் - யாழ்ப்பாணம். 01089

### தேவை

இலுப்பைப் பிண்ணாக்கு (அரைப்பு) தேவைப்படுகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம். 01088


அஸாமுடன் தொடர்பில்லை - புலிகள்

## 'இந்திய அரசின் திட்டமிட்ட பொய்ப்பிரசாரமே இது'

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியினரும், ஆந்திரப் பிரதேசத்து நக்சல்வாரி தீவிரவாதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாக இந்திய மத்திய அரசு தெரிவித்த குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மறுத்துள்ளது.

இது எந்தவித ஆதாரமுமற்ற, தீயநோக்கம் கொண்ட ஒரு கட்டுக் கதையாகும் எனவும் தெரிவித்துள்ள மக்கள் முன்னணி இது தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளைப்பற்றி ஒரு தப்பான அபிப்பிராயத்தையும், அச்ச உணர்வையும் இந்திய மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன், மத்திய அரசு இந்தக் குற்றச்சாட்டை எம்மீது சுமத்தியுள்ளது.

இத்தகைய அபாண்டமான குற்றச்சாட்டுக்களையும், பொய்ப்பிரசாரங்களையும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கெதிராக பயன்படுத்துவது இந்திய மத்திய அரசிற்கு இது தான் முதற்தடவையுமல்ல.

விடுதலைப் புலிகளாகிய நாங்கள் தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிற ஒரு விடுதலை அமைப்பு.

இந்திய அரசியலிலோ அல்லது இந்தியாவின் உள் விவகாரங்களிலோ தலையிடும் நோக்கம் எமக்கில்லை. இந்திய மக்களை எங்களுடைய நேசசக்திகளாகத் தான் பார்க்கிறோம்.

தமிழீழ மக்களின் பேராதரவுடன் அளப்பரிய தியாகங்களுக்கு மத்தியில் போராடிக்கொண்டிருக்கும் எமது இயக்கத்தின் மீது இத்தகைய அபாண்டமான பழிகளையும், பொய்க்குற்றச் சாட்டுக்களையும் சுமத்த வேண்டாம் என இந்திய மத்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றோம் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

## இடமாற்றம்

மன்னார் உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்களாகிய எம். நவரத்தினம், கே. நவரத்தினம், சீ. ஏரம்பமூர்த்தி ஆகியோரில் இருவர் முல்லைத்தீவிற்கும் ஒருவர் வவுனியாவிற்கும் மாற்றப்பட்டுள்ளனர். (17)


யாழ்ப்பாண மாவட்டத் தேசிய பாடசாலைகள்
யாழ் இந்துக் கல்லூரி / வேம்படி மகளிர் கல்லூரி
ஆண்டு - 6

### அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1991

01. இப்பரீட்சை பெப்ரவரி மாதத்தில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.
02. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும். 01 02. 1980 ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத்தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை, பிரவேசம் பெற விரும்பும் கல்லூரி அலுவலகத்தில் கட்டணமாக ரூபா முப்பது (30/-) செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பிரவேசம்பெற விரும்பும் கல்லூரியில் நேரில் 30. 01 1991 புதன்கிழமைக்கு முன்னதாகக் கையளிக்கப்படல் வேண்டும் 30 01. 1991 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் நேரில் பெற்றுக்கொள்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செல்வி இ. இராஜரத்தினம்
அதிபர்
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க. சி. குகதாசன்
அதிபர்
யாழ் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

01091

## கேள்வி எழுப்புகிறார் கிட்டு:

## ஆயுதப் போராட்டத்தை முற்றாகக் கைவிட்டால்

# தமிழினம் என்று ஒன்று மிஞ்சுமா?

''காலவரையற்ற யுத்த நிறுத்தம் என்பது அரசாங்கத்தின் அனுசரணை இல்லாமல் தொடராது. இப்போது பரிசீலனை செய்ய கால அவகாசம் கோரியுள்ளனர். கொடுத்துள்ளோம். பேச்சுவார்த்தை நடத்துவது பற்றிச் சிந்திக்கவும் யுத்த நிறுத்தத்தை நீடித்து அவகாசம் கொடுப்போம். ஆனால் காலவரை இல்லை என்பதற்காக வருடக்கணக்கான யுத்த நிறுத்தம் என்பது இல்லை.''

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகப் பேச்சாளர் திரு. கிருஷ்ணகுமார் கிட்டு கனடிய சஞ்சிகை ஒன்றிகு ;அளித்த பேடடியில் கூறியுள்ளார்.

''சமாதானம் என்ற போர்வையில் உரிமை மறுப்பு நடப்பதை அனுமதிக்கவும் மாட்டோம். ஜூன் மாதம் போர் மீண்டும் தொடங்கியது பற்றி கூறுபவர்கள் இந்தியப் படை வெளியேற்றத்தை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் 35 புதிய இராணுவ முகாம்களை நிறுவியது பறறி என்ன சொல்லப போகிறார்கள? எமது உரிமையில் நாம் என்றும் உறுதியாகவே இருப்போம்'' என்று அவர் கூறினார்.

''யுத்த நிறுத்தத்திற்கு கண்காணிப்புக்குழு ஒன்று வேண்டும் என்று கேட்காதது ஏன்? என்று கேட்கப்பட்டபோது, இன்னும் முறையான யுத்த நிறுத்தத்திற்கு அரசு இணங்கவில்லை. அரசாங்கம் இணங்கி



முறையான இருசாராரும் கடைப்பிடிக்கும் யுத்த நிறுத்தம் வரும்போது கண்காணிப்புக்கான ஏற்பாடு ஒன்றைச் செய்யலாம்'' என்று பதிலளித்தார்.

''மக்கள்படும் துன்பத்தைக் கணக்கில் கொண்டு போர் நிறுத்தம் செய்யும் நீங்கள் ஒரேயடியாக ஆயுதப்போராட்டத்தற்கு முழுக்குப் போட்டு சமாதான வழிமூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கூறபபடுவதற்கு என்ன சொலவீர்கள்'' என்று கேட்டதற்கு இப்படிக் கூறுபவர்களைப பார்த்து நாம் ''எமது ஆயுதப் போராட்டத்தை முற்றாகக் கைவிட்டால் தமிழினம்என்று ஒன்று நாட்டில் மிஞ்சுமா என்று கேட்கிறோம்'' என்றார்.

## ஐவரில் ஒருவரே தமிழர்

உள்ளூராட்சி நிர்வாக சேவைப் பரீட்சையில் இம்முறை ஐவர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் ஐவரும் பெப்ரவரி மூதலாநதிகதி முதல் பதவி உயர்வு பெற்று கடமையாற்றவுள்ளனர் என உள்ளூராடசி சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பதவி உயர்வு பெற்றவர்களில் யாழ் மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கமும் ஒருவராவர். ஏனைய நால்வரும் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்களாவர் (ப-11

## யாழ் மாவட்டப் பாடசாலைகளில் புதிய அதிபர்கள் நியமனம்

(நேற்றைய தொடர்ச்சி)

திருமதி ஏ. சிவஞானசுந்தரம் பிரதி அதிபர், யா/ தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, திருமதி ச. கனகராசா., அதிபர் யா/கோப்பாய் சரவணபவானந்த வித். இ. சிவஞானசுந்தரம் அதிபர் யா / ஊரெழு கணேச வித்தி.

செ. சிவலிங்கராசா அதிபர், யா / அச்செழு சைவப்பிரகாச வித். கே கதிரவேலு அதிபர் யா /கோப்பாய் ம. வித். சி. பாலசுப்பிரமணியம் அதிபர். யா / உரும்பிராய் இந்துக்கல்லூரி, சி. செல்லையா, அதிபர், யா / அச்சுவேலி மகா வித். ஆ. கமலநாதன் யா/ இணுவில் சைவப்பிரகாச வித் திருமதி. ஆர். இதயநாதன் அதிபர். யா / மானிப்பாய் சென். ஆன்ஸ் லோ. க. த. க. பாட. எஸ். முத்துக்குமாரசாமி அதிபர், யா / கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. எஸ். சத்தியநாதன், அதிபர் யா / நாவற்குழி ம. வித். கே. எம். சாம்பசிவம். அதிபர், யா / மட்டுவில் கமலாசனி வித் ஜே. யோன் பிள்ளை, அதிபர், யா / மிருசுவில் றோ. க. த. க. பாட. திருமதி என். தாமோதரம் பிள்ளை அதிபர், யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆர். கலைநாதன் யா / கொடிகாமம் திருநாவுக்கரசு வித். ஈ. கணேசன் அதிபர், யா / மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம வித் எஸ். தனபாலசிங்கம், அதிபர் யா / கட்டுவன்புலம் ம. வித். வை சச்சிதானந்தம், அதிபர், யா/ வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி. (32—4)

## வேலணைகோட்ட அதிபர் கூட்டம்

வேலணைக் கோட்ட கொத்தணி அதிபர் கூட்டம் 16-ம் திகதி புதன்கிழமை வேலணைக் கோட்டத்தில் நடைபெறும் என வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வேலணைக கோட்ட காரியாலய ஊழியர்களின் கூட்டமும் அன்றைய தினமே நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ப-17)

## வவுனியாவுக்கு புதிய அரச அதிபர்

வவுனியா அரசாங்க அதிபராக தம்பையாமார்க் கண்டு நியமிக்கப பட்டுள்ளார்.

சடந்த நலுமாதங்களாக இங்கு அரச அதிபராக கடமையாறறிய மி தர்மலிங்கம் மட்டக்களபபு மாவட்ட அரச அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

புதிய அரச அதிபர் வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்தவர் (ஓமந்தை-நொச்சிக்குளம்) என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குருநாகல் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள் நியமனம்!

குருநாகல் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு கிங்கள, முஸ்லிம் அதிபர்கள் நியமிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பகுதிகளிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம்களும், சிங்களப் பாடசாலைகளில் சிங்களவர்களும் அதிபர்களாக உள்ளனர்.

ஆனால் தமிழ்ப் பாடசாலைகளில் மட்டும் பிற மதத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும், பிறமொழியைச் சேர்ந்த சிங்களவர்களும் தற்பொழுது அதிபர்களாக நியமிக்கபபட்டு வருகின்றனர்.

குருநாகல் மாவட்டத்திலுள்ள புரவத்தகம சரஸ்வதி தமிழ் வித்தியாலயம், நொட்டிங்ஹில் தமிழ் வித்தியாலயம், மொரதன்னை தமிழ் வித்தியாலயம், பொல்காவலை சி. சி. எம். எஸ் தமிழ் வித்தியாலயம், உடபொல தமிழ் வித்தியாலயம் ஆகிய தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்களவர்களே அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் தகுதிவாய்ந்த தமிழ் ஆசிரியர்கள் இருந்தும் தமிழ் வித்தியாலயங்களுக்கு இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் பிற மத, மொழி அதிபர்கள் நியமிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (74)

## நண்டு ஓட.., நரி ஓட... பசு ஓட.. 'குவாகுவாவுக்கு' மட்டுமல்ல...

குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் மட்டுமல்ல வேளாண்மையிலும் பயிர்களுக்கிடையே சரியான இடைவெளி தேவை என்கிறது திருச்சி வானொலி.

குறுவைக்கு—நண்டு ஓட, சம்பாவுக்கு நரிஓட, கரும்புக்கு பசு ஓட, வாழைக்கு வண்டி ஓட, தென்னைக்கு தேர் ஓட போதிய அளவு வரிசைக்கு வரிசை இடைவெளி விட்டு நட வேண்டும் என்று திருச்சி வானொலியின் சிறப்பு நிகழ்ச்சியொன்றில் நாட்டுப்புற மக்களுக்கு விளங்கும் படியாக நாடோடி வழக்கில் உதாரணம் காட்டப்பட்டது.

சினிமா

## நாற்பத்தேழு வயது ஆச்சி! மனோரமா

'உதய சூரியன்' - தி மு. க. பிரசாரநாடகம். அதன் முக்கிய கதாபாத்திரம் ஒரு காங்கிரஸ் இளைஞர். அவர் காதலி தி மு. க கொளகைப்பற்றுள்ள இளம்பெண் ஒரு காட்சியில் அப்பெண்பேச்சைக் கேட்ட காதலன் 'கண்ணம்மா என் காதலி; உன் சொற்படியே நடக்கிறேன்' என்று கூறி தி. மு. க. வில் சேர்வார்.

ஆண்பாத்திரமாக நடித்தவர் கலைஞர் மு. கருணாநிதி. காதலியாக மனோரமா, இந்த மனமாற்றக் காட்சியில் மட்டும் மனோரமா இடைவிடாமல் வசனம் பேசவேண்டிய நேரம் நாற்பது நிமிஷம்.

கலைஞரோடு மட்டுமன்றிப் பின்னாளில் முதலமைச்சர்களாகப் பொறுப்பேற்ற மூவருடன் நடித்த தனிப்பெருமையும் மனோரமாவுக்கு உண்டு அந்த மூவர் அண்ணா, கலைஞர், எம். ஜி. ஆர்.

தனது வாழ்க்கையை நாடகமேடையில் ஆரம்பித்த இவர் திரைஉலகில் ஆயிரம்படங்களுக்குமேல் நடித்துக் கின்னஸ் புத்தகத்திலும் பேரைச்சேர்த்தவர்.

'என்னைப் பொறுத்தவரை மூன்று தலைமுறை இரசிகர்களை வெற்றிகரமாகச் சந்தித்து விட்டேன். நாலாவது தலைமுறையைக்கூட என்பேரை உச்சரிக்க வைத்திருக்கிறேன்' இது ஒன்றைத் தான் நான் சாதனையாகக் கருதுகிறேன்' என்கிறார் மனோரமா.

மூன்று நான்கு வயது நிரம்பிய நேர்ஸரி சிறுவர்களே, காருக்குள் இருக்கும் ஆளை அடையாளம் கண்டு ''மனோரமா, மனோரமா'' என்று சத்தமிட்டு குரல் கொடுக்கிறார்கள். இதைத்தான் நான் மிகப்பெரிய அவார்டாக நினைக்கிறேன் என்கிறார் இவர்.

கடந்த முப்பதாண்டுகளாகத் தமிழ்ப்பட உலகில் ஒரு நகைச்சுவை நடிகையாக விளங்குபவர் மனோரமா.

அவர் முதன் முதலில் நகைச்சுவைப் பாத்திர மேற்று நடிக்கத் தொடங்கியது கொஞ்சம் மனவருத்தத்துடனும் தனக்குக் 'கொமெடி' வருமா என்ற சந்தேகத்துடனும்தான்.

1958 இல் கண்ணதாசன் 'மாலையிட்டமங்கை' தயாரித்த வேளை தி. மு. க. நாடகங்களில் கதாநாயகியாக நடித்து வந்த மனோரமாவுக்குக் கதாநாயகி வேடம் கொடுக்க முடியாமல் நகைச்சுவைப்பாத்திரம் கொடுத்தார்.

'அன்று நான் கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என்று அடம்பிடித்திருந்தால் அதன் பிறகு என்னால் கதாநாயகியாக ஆகியிருக்கமுடியும் ஆனால் ஆறு அல்லது ஏழு வருஷம் கதாநாயகியாக இருந்துவிட்டு அப்புறம் சினிமாவை விட்டு விலகியிருப்பேன் இத்தனை வருடம் தாக்குப் பிடித்திருக்க முடியாது' என்று சொல்லிச் சிரிக்கிறார் மனோரமா.

உண்மைதான், மனோரமாவிற்குப் பிறகு கதாநாயகிகளாக அறிமுகமான சறோஜாதேவி. ஜெயலலிதா, வாணிஸ்ரீ, லதா, மஞ்சுளா, அம்பிகா, ஸ்ரீபிரியா போன்றோர் இன்று திரையுலகிலிருந்து காணாமல் போய்விட்டார்கள் மனோரமாவுடன் முன்னூறு படங்களுக்கு மேல் நடித்த நாகேஷ்கூட ஓய்வு பெற்றுவட்டார் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் மனோரமா இன்னும் நடித்துக்கொண்டிருக்கிறார். அவை வெள்ளிவிழாக் கொண்டாடுகின்றன.

''சில்வர் ஜூபிளி'' கொண்டாடிய 'பாட்டி சொல்லைத் தட்டாதே' மனோரமாவை மனதில் வைத்துக்கொண்டே திரைக்கதையை எழுதித் தயாரித்ததாக தயாரிப்பாளர் ஏ. வி. எம். சரவணன் கூறுகிறார்.

மனோரமாவின் வெற்றிக்குக் காரணம் அவர் நல்ல நடிகை மட்டுமல்ல. அவரது 'கொமெடி' என்றால் தரமாக இருக்கும் என்ற நம்பிக்கையை குறிப்பாகப் பெண்களிடம்-ஏற்படுத்தியிருப்பது தான். மனோரமா நடித்த படங்களில் இரட்டை அர்த்தத்தில் வசனம் இருக்காது. ''கொமெடி'' என்ற பேரில் அபத்தமான கூத்து இருக்காது.

மனோரமா ஒருவகையில் சிவாஜிபோல அநேகமாக எல்லாவித வேடங்களிலும் நடித்து விடடார். இதனால் இனி எந்தப்பாத்திரத்தைச் செய்தாலும் முன் எப்போதோ இது மாதிரி ஒன்றைச் செய்திருக்கிறாரே என்ற எண்ணத்தைத் தவிர்க்க முடியாது. மனோரமா இன்னொரு வகையில் எம்.ஜி ஆர் போன்றவர் எம் ஜி ஆர் எந்தப்பாத்திரத்தைச் செய்தாலும் அவர் தான் கண்ணுக்குத் தெரிவார். அதுபோல மனோரமா எவ்வளவு சிறப்பாக நடித்தாலும் அவரது பாத்திரங்களை விட அவர்தான் முக்கியத்துவம் பெறுவார்.

இத்தனை சிறப்புகளுக்கும் இடையில் இவர் வாழ்க்கையை எடுத்தால் நிறைய சோகம் கலந்தது. சின்னவயதில் இவர் பட்ட கஷ்டங்கள் ஏராளம் இவர்தந்தை தன் மனைவியின் சொந்தத் தங்கையையே இரண்டாம் தாரமாகக் கொண்டார். அத்தங்கையே அக்காவைக் கொடுமைப்படுத்த ஆரம்பித்ததால் கோபி சாந்தாவும் - அது தான் மனோரமாவின் இயற்பெயர் - அவரது அம்மாவும் வேறு இடம்போய் வாடகை வீட்டில் தனியாக வாழ்ந்தனர் முறுக்கு செய்து விற்றும், செட்டி நாட்டுப் பணக்கார வீடுகளில் வேலை செய்தும் மகளை வளர்த்த அம்மா நோய்வாய்ப்பட மகள் வீட்டு வேலைக்குப் போக வேண்டியதாயிற்று.

கோபி சாந்தாவிற்கு இருந்த பெரிய சொத்து அவளது குரல்வளம். தாம்குடியேறிய பள்ளத்தூரைச் சுற்றியிருந்த செட்டிநாட்டுக் கிராமங்களில் பாட்டுக்கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார். அப்போதுதான் 'மனோரமா' என்று பெயரை மாற்றிக் கொண்டார்.

மணவாழ்வு மற்றொரு சோகம் தன்னுடன் நாடகங்களில் நடித்து வந்த இராமநாதனை காதலித்து மணந்தார்.'' என்

—4ஆம் பக்கம் பார்க்க

# ஆஸ்பத்திரி கழிவு நீர் மீண்டும் பண்ணைக் கடலுக்கு

யாழ் போதனா வைத்தியசாலை கழிவு நீரை பண்ணைக் கடலுக்கு அகற்றும் இயந்திரங்கள் மீண்டும் செயற்பட தொடங்கவுள்ளன.

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் கோட்டை இராணுவத்தினரால் பண்ணைக் கடலுக்குள் கழிவுகளை அகற்றும் மார்க்கம் தடுக்கப்பட்டிருந்தது.

இதனால் வைத்தியசாலை கழிவுநீர் வைத்தியசாலை நிர்வாகம் பொது கழிவு அகற்று வாய்க்கால்கள்மூலம் அகற்றப்பட்டுவந்ததுடன் நகரின் சூழல் பாதிப்படைந்ததும் குறிப்பிடத்தக்கது. (74)

# பாடசாலை ஆய்வு கூடங்களுக்கு உதவியாளர் நியமிக்க ஏற்பாடு

யாழ் மாவட்டங்களில்உள்ள பாடசாலைகளில் ஆய்வுகூட உதவியாளர்களின் வெற்றிடங்களை நிரப்ப மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

மாவட்டத்தின் பெரியபாடசாலைகளில் முன்பு குறைந்தது இரண்டு ஆய்வுகூட உதவியாளர்கள் இருந்த போதிலும், அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றதாலும் சிலர் ஓய்வுபெற்றதாலும் ஏற்பட்ட வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதுள்ளது.

இதனால் பாடசாலைகளில் பரிசோதனை நடைபெறுவது ஏறத்தாள முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களுக்கு விஞ்ஞானப் பரிசோதனை முறையை மீண்டும் ஏற்படுத்தவே மேற்படி துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிய வந்துள்ளது. (32)

# கிராமிய வங்கிகளுக்குரிய பணம் ஓய்வூதியம் வழங்க போதாது

நேற்று முன்தினம் 'குமண' கப்பலில் வந்த பணத்தில் கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு என ஒரு கோடி ரூபா பல. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இத்தொகை ஒரு மாத ஒய்வூதியத்தைக் கூட வழங்கமுடியாதிருப்பதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் ஒரு மாதத்திற்கு பதினொரு லட்சம் ரூபா தேவைப்படுமிடத்து ஏழு லட்சம் ரூபாவே மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (66)

# கொழும்பிலிருந்து தபால்கள் வந்தன இன்று விநியோகிக்கப்படும்!

'குமண' கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட வெளியூர்த் தபால்கள் யாழ் பிரதம தபால் நிலையத்திற்கு நேற்று மாலை கொண்டுவரப்பட்டுள்ளன.

இவை இன்று தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தபாற் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை, சுன்னாகம், வடமராட்சிப் பகுதி தபாற் பொதிகளும் பருத்தித்துறையில் வைத்து அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன இவையாவும் இன்று தரம்பிரித்து விநியோகிக்கப்படும். (33)

## அரசியல்வாதிகளின்...

காப்பிற்கென 80 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களுக்கான பாதுகாப்பை ஐம்பது சதவீதத்தினால் குறைப்பதன் மூலம் பாதுகாப்பு செலவையும் 40 வீதமாக குறைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் வாதிகளுக்கென வழங்கப்பட்ட ஆறாயிரம் ஆயுதங்களில் இதுவரை இரண்டாயிரம் ஆயுதங்களே மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன ஒப்படைக்கப்படாத மிகுதி நாலாயிரம் ஆயுதங்களையும் ஜனவரி 25 இற்கு முதல் ஒப்படைத்திடவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

## அனைத்துப்...

சாலைகளிலிருந்தும் மூன்று மாணவப் பிரதிநிதிகளை நாளை சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சமூகம் தருமாறு மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (71)

## தமிழக அரசிற்கு...

இது அவருக்கு நல்லதல்ல'' என சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் தி.மு.க. அரசை கலைக்குமாறு அ.தி.மு.க. கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து பெரும் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

## நாற்பத்தேழு...

மகன் பூபதி பிறந்த பதினைந்தாவது நாளில்தான் அவரை நான் கடைசியாகப் பார்த்தது. அவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டார் இப்போதும் நான் காலையில் எழுந்ததும் சாமி கும்பிடும்போது 'அவரையும் நல்லா வை கடவுளே' என்றுதான் வேண்டுகிறேன்'' என்கிறார் மனோரமா நெகிழ்வுடன்.

நாற்பத்தேழு வயதாகும் மனோரமா தன் அம்மா, மகன், மருமகள், பேரக்குழந்தைகள் ஆகியோருடன் வாழ்ந்து வருகின்றார். மனோரமாவிற்குத் திரைப்பட உலகில் ஆச்சி என்று ஒரு செல்லப் பெயர் உண்டு.

- கல்யாண்குமார்

நன்றி: இந்தியாருடே

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி. 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 11-01-1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### கோத்தணி அதிபர்களுக்கு கல்விப்பகுதி அறிவுறுத்தல்

# பாடசாலை மாணவர் அனுமதி அதிபர்களே பொறுப்பாவர்

ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் அனுமதி தொடர்பானதீர்மானங்களை மேற்கொள்வது அப்பாடசாலைகளின் அதிபர்களைப் பொறுத்ததே என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிபர்கள் கல்வி அமைச்சினதும், கல்வித்திணைக்களத்தினதும் சட்டதிட்டத்துக்கேற்ப அனுமதியினை மேற்கொள்வர்,

இது சம்பந்தமான ஒழுங்கினங்கள், முறைப்பாடுகள் என்பன அவ்வப்பகுதிக் கொத்தணி அதிபர்களுக்குச் செய்யப்பட்டு அம்மட்டத்திலேயே தீர்த்து விடவேண்டும் என்றும் கொத்தணி அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேசியபாடசாலை அனுமதி தொடர்பான விடயம் முற்றுமுழுதாக பரீட்சைப்புள்ளிகள் புலமைப்பரிசில் பரீட்சைமுடிவுகள் என்பவற்றை மையமாக வைத்தே அவ்வவ் அதிபர்களால் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (32)

# ஆனையிறவில் ஷெல்தாக்குதல் போராளி காயம்

நேற்று முன்தினமிரவு ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்துபரந்தனில் குடிமக்கள் வாழும்பகுதி நோக்கி 10 ஷெல் ஏவப்பட்டன.

இதே வேளை இராணுவத்தின் தாக்குதலினால் ஒரு போராளி காயமடைந்தார்.

இந்த முகாமில் இது மூன்றாவது தடவையாக யுத்த நிறுத்த மீறல் நடைபெற்றுள்ளது. (71)

# யுனிசெப் செய்திக்கு அனுமதி வேண்டும்

ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) தொடர்பான எந்தச் செய்திகளையும் அனுமதி இன்றி பிரசுரிக்கவேண்டாம் என அந்த நிதியத்தின் உதவி இயக்குனர் பீற்றர் கொக்கிளஸ் அறிவித்துள்ளார்.

# மொசாட்' விசாரணை

இலங்கை விவகாரங்களில் இஸ்ரேல் உளவுப்படை மொஸாட்டின் நடவடிக்கை பற்றிய விசாரணை நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அரச வழக்கறிஞர் எஸ். டபிள்யூ. பி வடுகொடபிட்டிய தலைமை விசாரணை ஆணைக்குழுவினால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பிரதேச...

டுள்ளதாவது;

''ஸ்ரீலங்காவுக்கு உள்ளும் புறமும் இருந்து எழும் சமாதானத்துக்கான கோரிக்கைக்கு அரசும் அனைத்து அரசியல் கட்சிகளும் மதிப்பளித்துதமிழ் மக்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கும்தீர்வொன்றை முன்வைக்கஇதுவே நல்ல தருணம்

உலகெங்கும் நிலவிவரும் சமஷ்டி அமைப்பு முறையை பின்பற்றுவதும் உசிதமானது.

## முரணான...

கிறது.

இதே வேளை சகல இன மக்களாலும் வாசிக்கப்படும் ஆங்கிலப் பத்திரிகைகள் யுத்த நிறுத்தத்திற்கு எதிரான செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிடுகின்றன. இது சிங்களப்பத்திரிகை வாசகர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப11)

## வடக்கே..

களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

# வவுனியா தாண்டிக்குளம் வீதி மீண்டும் திறக்கப்பட்டது

கடந்த வியாழக்கிழமை வவுனியா விவசாயப்பண்ணை ஊடான பிரதான யாழ்-தாண்டிக்குளம் வீதி திறந்து விடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினார்கள்

இவ்வீதியால் சைக்கிளில் செல்வோரும், நடந்து செல்பவர்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிகின்றது.

மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதினாலேயேஇவ்வீதியால்மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

விடுதலைப் புலிகள் வவுனியா விவசாய கல்லூரிக்கு அருகாமையில் காவல் தடைமுகாமை அமைத்துள்ளனர். இராணுவம் கண்டி வீதி பிறவுண் கம்பனிக்கு சமீபமாக தடைமுகாமை கொண்டுள்ளது.

கடந்த ஏழு மாத காலம் இராணுவம் யாழ் வீதியில் முன்னேற முடியாது வவுனியா நகரத்திற்குள்ளேயே முடங்கிக் கிடந்தது குறிப்பிடத்தக்கது. (11)

# ஹெலியில் இருந்து பிரசுரங்கள்

இணுவில் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் ஹெலிகப்டரில் இருந்து பிரசுரங்கள் வீசப்பட்டன. இவை தமிழிலும், ஆங்கிலத்திலும் பிரசுரிககம்பட்டிருந்தன.(48)

## 43 சிங்களப்...

களில் இருந்து இந்த பொலிஸார் விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தனர்

தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸாரின் பெயர் விபரங்கள் வருமாறு;-

ஏ ஜே. முதியான்சலாகே (27) தம்புல்ல, பீ. எஸ். பண்டார (25) உடல்துடுவ. மீதலாவ, எஸ். டி. குணவர்தனா (20) களுத்துறை தெற்கு, ஏ. டி. பிரேமதாசா (29) தங்காலை, டபிள்யூ. யூ. ஆனந்த சமந்தலாக (22) கேகாலை, டீ. டீ. சிசிற சந்தலால் (22) கேகாலை, எச். பீ. அபயவிக்கிரம (26) வலஸ்முல்லை, ஈ எம். தசநாயக்கா (26)தெல்தெனியா, எம். டபிள்யூ பிரியந்த (22) வெலிகம, எச். எம். பியரத்தின (22) கல்கமுவ. டபிள்யூ. டீ தர்மசிறீ (25) பெபிலியாவெல, ஈ. எம். சிசிற செனரத்தின (28) கெஸ்கல, கண்டி, எச் டபிள்யூ. வாமரத்தினா (54) அவிசாவெல, எஸ். எம். எட்வேட் பிரேமரத்தினா 36) கல்கமுவ, கே. ஏ. ரஞ்சித் (26) மொரப்பிட்டிய, ஆர். எம். அனுராகந்த (23) பொத்துவில், டீ. எம். சுனில் (23) குலன்னுகே, ஒ டபிள்யூ. திசநாயக்க (23) கம்பளை, ஏ. எம். லொகு பண்டா (41) லொகுபண்டா, டபிள்யூ. எம். விஜயகோன் பண்டார (24)உடபுசல்லாவ, வீ ஆர். ஜீவகரத்தினா (20) திருகோணமலை, ஈ, வீ, திலகரத்தினபண்டா, (34) தெல்தெனியா, கே. பி லால் குணசேகரா, (23)உரபொல, எல், டீ எல் சிறிஸ்தோபர் பெரேரா (37) மாத்தளை, டீ என். வீரவர்த்தனா (22) அம்பாறை, டீ. எம், தர்மவர்த்தனா (21) அக்கரைப்பற்று, டீ. எம். என், சுமன்சிறீ (19) லகுகல, ஆர். எம். கருணாரத்தினா, (23) வீரகொட, எஸ். ஏ. விஜேபண்டார (22) பனானியா, ஜே. என் ஆர். ஜெயவர்த்தனா (24) திருகோணமலை, பீ. திலகரத்தினா (23) அரநாயக்கா, எஸ் சுதுநிலாமிசரத் (19) லமுகல்ல,

எஸ் ஈ. அத்துகொறல்ல (21) ராஜகிரிய, ஏ ஏ நிமல் அரபற்று (22) பொத்துகர, ஆர் ஏ. உபாலி நிசங்கா(20) லகுகல, வீ. தர்மபால (20) வலஸ்மூல்ல, டபீள்யூ எம். கருணாநாயக்க(31)நிககரவட்டிய, கே. ஜயதிலக (29 கெக்கிராவை, எம். எம. கே. ராஜரத்தினா (21) திருமலை, யூ அமரசிங்க (27) மொரப்பிட்டிய, எச் டி. விமல்சந்திரசிறீ (26) குளியாபிட்டி, எஸ். சமரவிக்கிரம (29) அக்குரச, ஆர். எச். நாயானந்த (27) மீரிகம. (ப5)


# யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை

# பிரவேசப் பரீட்சை

தை மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை
காலை 9-00 மணிக்கு

ஆண்டு 1 : நேர்முகப் பரீட்சை, பெற்றோர் தமது பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டுவருதல் வேண்டும்.

ஆண்டு 6 : எழுத்துப் பரீட்சை, கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நடைபெறும்.

யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

அதிபர்

01094